**OS.90/2022**

**நாள். 17.02.2026.**

**வா.சா. 1 – ஹமீதுகளஞ்சியம்**

4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

மொத்தம் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்குதாக்கல செய்துள்ளேன் என்றால் 2650 சதுரடி. வழக்கு 2, 3 அயிட்ட சொத்துக்கள் சேர்ந்தும், அதாவது அடுத்தடுத்தும், 1 வது அயிட்ட சொத்து தனியாகவும் உள்ளது. தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் சர்வே எண்.317/1 ஏ ல் கட்டுப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணுக்கு செட்டில்மென்ட் காலத்தில் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் இராமநாதபுரம் ராஜா பாஸ்கரசேதுபதி பெயரில். பாஸ்கர சேதுபதி பெயரில் செட்டில்மென்ட் காலத்தில் ஏற்பட்டிருந்த பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் பாஸ்கர சேதுபதி பெயரில் பட்டா இருந்தது என கூறுகிறேன் என்றால் தெரியாது. தாவா வழக்கில் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல்செய்யப்பட்டுளள எதிர்வழக்குரையில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்பதை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்கள் செட்டில்மென்ட காலத்தில் அனாதீனம் என வகைபடுத்தப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் பாரா 3 ல் தாவா சொத்துக்களையும் அத்துடன் சேர்ந்த பிற சொத்துக்களையும் ராமநாதபுரம் ராஜா சண்முகராஜேஸ்வரநாகநாதசேதுபதி சிதம்பரநாததுரைக்கு 30.09.1951 தேதியில் எழுதிக்கொடுத்ததாக நான் சொல்லியுள்ள ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சிதம்பரநாததுரையிடமிருந்துதான் என் தாயார் 3 கிரையப்பத்திரத்தின் மூலம் 3 அயிட்ட சொத்துக்களையும் கிரையம் பெற்றதாக பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் கிரையம் வாங்குவதற்கு முன்பு அவர் கிரையம் பெற்ற சொத்துக்கள்

சிதம்பரநாததுரைக்குத்தான் பாத்தியம் என்பதற்குண்டான ஆவணங்களை என் தாயார் பார்த்தாரா, இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சிதம்பரநாததுரை பெயரில் முதன்முதலாக நத்தம்நிலவரிதிட்டத்தின் கீழ் கூட்டுப்பட்டா தாக்கல் செய்யும்படி உத்தரவாகியிருந்தது என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் என்ன ஆவணம் என்றால் சிதம்பரநாததுரை மற்றும் இருவர் பெயரில் கூட்டுப்பட்டா தாக்கல் செய்ய பிறப்பிக்கப்பட்ட உத்தரவு. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தனிவட்டாட்சியரின் அலுவலக முத்திரை இல்லை, சில எழுத்துக்கள் டைப் செய்யப்பட்டு, சில கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை 4ம் பிரதிவாதி ஆட்சேபித்து இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் மேல்முறையீடு செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் மேல்முறையீட்டில் வா.சா.ஆ.1 மூலம் பிறப்பித்த உத்தரவை கடந்த 03.12.1991 தேதியில் ரத்து செய்துள்ளார் என்றால் தெரியாது. இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவில் பாதிக்கப்பட்ட எதிர்மனுதார்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண்.57/1992, 58/1992 மற்றும் 59/1992 ஆகிய 3 மனுக்கள் தாககல் செய்து அந்த 3 மனுக்களும் 16.06.1999ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன என்றால் தெரியாது. அந்த தள்ளுபடி உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் W.A.No.1115/1999, 1116/1999, 1117/1999 தாக்கல் செய்யப்பட்டு அந்த மேல்முறையீட்டு மனுக்களும் 26.04.2013 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன என்றால் தெரியாது. மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு, சென்னை உயர்நீதிமனறத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மற்றும் ரிட்அப்பீல்மனு ஆகிய விவரங்கள் 4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றும், அந்த விவரங்களை படித்து தெரிந்து கொண்டு ஒப்புக்கொண்டால் எனது வழக்கிற்கு பாதகமாகிவிடும்

என்பதால் தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவுப்படி வா.சா.ஆ.1 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர்த்து தாவா சொத்துக்கள் சிதம்பரநாததுரைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வேறுஒரு பட்டாவும் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லும் மற்றொரு பட்டா வா.சா.ஆ.18–ஆ என்றால் ஆமாம். வா.சா.ஆ.18 பட்டா என் பெயரிலோ, என் தாயார் பெயரிலோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ஆவணம் வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 2, 3 அயிட்டங்களுக்கு கிழக்கே எம்.ஏ. காதர் சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி எம்ஏ காதர் தாவா சர்வே எண்ணில் கண்ட ஒருபகுதி சொத்துக்கு உரிமையாளர் என விளம்புகை பரிகாரம் கேட்டு நகராட்சி மற்றும் தமிழக அரசுக்கு எதிராக வழக்கு இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.74/2005 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் A.S.No.25/2013 தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி A.S.No.25/2013 வழக்கு 20.02.2019 ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எம்ஏ காதர் தாக்கல் செய்த வழக்கில் தாவா சர்வே எண்ணில் கண்ட ஒருபகுதி சொத்து சிதம்பரநாததுரைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றுதான் உரிமைகோரியுள்ளார் என்றால் சரிதான். A.S.No.25/2013 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் S.A.No.424/2020 தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் தெரியாது. எம்ஏ காதர் தாக்கல் செய்த அப்பீல் வழக்கு விவரங்கள் பற்றி 4 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றும், அதை ஒப்புக்கொண்டால் என் வழக்கிற்கு

பாதகம் ஏற்படும் என்பதால் மேற்படி விவரங்கள் எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாளது தேதிவரை மேற்படி வழக்கு நடவடிக்கையின்படி சிதம்பரநாததுரைக்கு தாவா சர்வே எண்ணில் எந்தவித உரிமையும் இல்லை என தீர்ப்பு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 பட்டாவின் அடிப்படையில்தான் என் தாயார்கிரையம் பெற்ற 3 கிரைய ஆவணங்களும் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயார் கிரையம் பெற்ற கிரைய ஆவணங்களின் அசல் எங்குள்ளது என்றால் என் தாயார் இறந்த சமயத்தில் பார்த்தபோது அசல் ஆவணங்கள் இல்லை, அதனால் எங்குள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலே என் தாயார் கிரையம் பெற்ற அசல் ஆவணங்கள் காணாமல்போய்விட்டது என சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 முதல் 7 ஆவணங்களின் மூலம் என் தாயார் தாவா சொத்து தவிர்த்து வேறு சொத்துக்களை பொறுத்து ரசீதுஅகமது மற்றும் அப்துல் ரசாக் ஆகியோர்களுக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்துக்களின் அனுபவம் யார் வசம் உள்ளது என்றால் காலியிடமாக உள்ளது, அப்துல்ரசாக் மற்றும் ரசீதுமுகமது இருவரும் மலேசியா சென்றுவிட்டனர். சுலைகாபீவிக்கு நானும், 1, 2 பிரதிவாதிகள்தான் வாரிசுகள் என்பதை காட்டுவதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே சகுந்தலா என்பவர்க்கு தாவா சர்வே எண்ணில் கண்ட ஒருபகுதி சொத்து தீர்ப்பாகியுள்ளது என்றும், அதன் அடிப்படையில் எனக்கும் தீர்ப்பு செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். சகுந்தலாவிற்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட்ட வழக்கு இராமநாதபுரம் சார்பு நீதிமன்ற O.S.63/1985 என்றால் சரிதான். அந்த வழக்கில் கண்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நான் இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் தமிழக அரசு தரப்பினர் அல்ல என்றும், இராமநாதபுரம் நகராட்சி மட்டுமே தரப்பினர் என்றும் சொன்னால் தெரியாது. O.S.63/1985 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை படித்துப்பார்த்தேனா என்றால்

இல்லை. O.S.63/1985 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக இராமநாதபுரம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் A.S.147/1989 என்ற மேல்முறையீடு 4 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் கண்ட சொத்தை பொறுத்து வழக்கு நடவடிக்கைகளை தவிர்க்கும்பொருட்டு சிதம்பரநாததுரையிடமிருந்து 4 ம் பிரதிவாதி பெயருக்கு தானசெட்டில்மென்ட் ஆவணம் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த இனாம்செட்டில்மென்ட் ஆவணத்தில் கண்ட சொத்து மட்டும்தான் சிதம்பரநாததுரைக்கு பாத்தியப்பட்டது என 4 ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டு தானசெட்டில்மென்ட் ஆவணம் எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. சிதம்பரநாததுரை 4 ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தை படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை. தாவா 2, 3 அயிட்ட சொத்துக்கு எந்த திசையில் 4 ம் பிரதிவாதி சிதம்பரநாததுரையிடமிருந்து செட்டில்மென்ட் ஆவணம் மூலம் பெற்ற சொத்து உள்ளது என்றால் 1 ம் இலக்க சொத்துக்கு கிழக்கேயும், 2, 3 இலக்க சொத்துக்களுக்கு மேற்கேயும் நடுவில் உள்ளது. தமிழக அரசு எந்த நடவடிக்கையிலும் ஒரு தரப்பினராக இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தமிழக அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், 4 ம் பிரதிவாதி எழுதி வாங்கியுள்ள இனாம்செட்டில்மென்ட ஆவணமோ, சமாதான நடவடிக்கையோ தமிழக அரசை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்து உள்ளிட்ட சர்வே எண்.317 ல் கண்ட மொத்த சொத்துக்களும் 1949 ம் ஆண்டில் இனாம்ஒழிப்பு சட்டத்தின் கீழ் அரசு உடைமை ஆக்கப்பட்டது என்றும், பின்னர் மேற்படி சொத்து 4 ம் பிரதிவாதி வசம் பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், ஜமீன் ஒழிப்பு சட்டத்தின் படி இராமநாதபுரம் ஜமீன் ராமநாதசேதுபதி செட்டில் மென்ட அதிகாரிகள் முன்பு மேற்படி மொத்த சொத்தும் தனக்கு பாத்தியப்பட்டது என்றும், எனவே தனது பெயரில் பட்ட வழங்கும்படியும் மனுதாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்படி மனுவில் 30.06.1976 ல் ஏற்பட்ட உத்தரவுப்படி தள்ளுபடி செய்யப்பட்டது

என்றும், மேற்படி தள்ளுபடி உத்தரவை ஆட்சேபனை செய்து இராமநாதபுரம் ஜமீன் சார்பில் வருவாய் கோட்டாட்சியரிடம் அப்பீல் மனுதாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி அப்பீல் மனுவும் 29.02.1972 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதனையும் ஆட்சேபனை செய்து ராமநாதபுரம் ஜமீன் இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்த அப்பீல் மனு Close செய்யப்பட்டது என்றும், அதன் பிறகு நிலநிர்வாக ஆணையரிடம் இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் மூலம் தாக்கல் செய்த அப்பீல்மனுவில் மீண்டும் கோவில்பட்டி உதவிசெட்டில்மெண்ட் அதிகாரியிடம் நடவடிக்கை செய்யும்படி 08.05.1975 ம் தேதி உத்தரவு ஏற்பட்டது என்றும், பின்னர் மேற்படி கோவில்பட்டி உதவி செட்டில்மெண்ட் அதிகாரி முன்னிலையில் நடைபெற்ற விசாரணையில் சர்வே எண்.317/1 ஏயில் கண்ட 70 ½ செண்டு அளவுள்ள சொத்து அரசுக்கு பாத்தியப்பட்டது என்றும், சர்வே எண்.317/1 பில் கண்ட 10 ½ செண்டு அளவுள்ள சொத்து மட்டுமே இராமநாதபுரம் ராஜா ராமநாதசேதுபதிக்கு பாத்தியப்பட்டது என்று 30.06.1976 ம் தேதி உத்தரவு ஏற்பட்டது என்றும், மேற்படி உத்தரவின் அடிப்படையில் செட்டில்மெண்ட் அடங்கல் ஆவணம் 20.08.1976 ம் தேதி திருத்தப்பட்டது என்றும், மேற்படி கோவில்பட்டி உதவி செட்டில்மெண்ட் அதிகாரி உத்தரவினை ஒப்புக்கொண்டு இராமநாதபுரம் ஜமீன் ராஜா ராமநாதசேதுபதியின் மனைவியான இந்திராதேவி சர்வே எண்.317/1 பில் கண்ட 10 ½ செண்டு அளவுள்ள சொத்தினை 30.03.1984 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் படி ஆயிசாஅம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றும் மேற்படி விவரங்கள் அனைத்தும் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றும், அந்த விவரங்களை தெரிந்து கொண்டு வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோவில்பட்டி உதவி செட்டில்மெண்ட் அதிகாரியின் 30.06.1976 தேதியிட்ட உத்தரவுப்படி வா.சா.ஆ.1 ஆவணத்தின் அப்பீல் மனுவில் ஏற்பட்ட உத்தரவின்படியும், தாவாசொத்துக்களில் சிதம்பரநாதபதுரை என்பவருக்கு

எந்தவித பாத்தியமும், உரிமையும் இல்லை என்றும், அரசுக்கு பாத்தியமான நிலங்களை அபகரிக்கும் நோக்கத்துடன் சட்டப்படி செல்லாத ஆவணங்களை தாக்கல் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், ஆகவே அதிகபட்ச செலவுத்தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றும் அதனால் நான் கேட்டுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

3, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

4ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததால் தனியாக குறுக்குவிசாரணை இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.